2. தகவல் கோரல்.

முன் அனுமதியின்றி எழுப்பப் பெறும் பிரச்சினைகள்.

திரு. மு. அம்பிகாபதி : பாயின்ட் ஆப் ஆர்டர், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே போக்குவரத்துத் துறையில் கண்டக்டர்கள், டிரைவர்கள் மத்தியில் பெரிய கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திடீரென்று இவ்வாறு கேட்கக் கூடாது. தனியாக அதுபற்றிக் கேட்கவும்.

திரு. ப. சுந்தரம் : பாயின்ட் ஆப் ஆர்டர், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூரிலே நான்கு நாட்களாக மொத்த அரிசி வியாபாரிகள், நெல் வியாபாரிகளின் கடை மூடப்பட்டிருக்கிறது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனியாக கவன ஈர்ப்பு மூலமாகக் கொண்டு வாருங்கள். திடீரென்று இந்தப் பிரச்னை வராது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பகுதியில் பல நாட்களாக காலரா நோய் கண்டு ஏராளமான பேர்கள் இறந்து வருகிறார்கள். அந்தப் பகுதியில் அதிகப்படியான பேர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை ஒரு வரைமுறையாக கொடுக்க வேண்டும். இன்று தான் கொடுத்திருக்கிறீர்கள். இனிமேல் ஒவ்வொன்றாக எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்திலே செங்கோட்டை என்னுமிடத்திலே போலீஸ் ஸ்டேஷனில் ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டிருக்கிறார் என்று பரவலாக ஒரு செய்தி . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வக்கீலுக்குப் படித்தவர். அவசர முக்கியத்துவம், கவன ஈர்ப்பு, குறுகிய கால வினா என்று எத்தனையோ முறைகள் இருக்கின்றன. இவற்றில் ஏதேனும் ஒன்றில்தான் கொண்டு வர வேண்டும். இன்று நிதி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியாக வேண்டும். நேரமில்லை. இதுபோன்ற தகவல்களை என்னுடைய அறையில் வந்து கேட்க வேண்டும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS